

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.7.2025) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர மாநகராட்சி இராயபுரம் பேசின் பாலம், பால் டிப்போ பகுதியில் வசித்து வந்த குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு, மூலக்கொத்தளம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பிற்கான வீடு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஆர்.மூர்த்தி, வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குனர் திருமதி ஸ்ரேயா பி.சிங், வடக்கு வட்டார ஆணையாளர் கட்டா ரவி தேஜா, இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ந.ப்ரியா ரவிச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மதுரை மாவட்டம் திருப்பாலை தாகூர் நகரில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.17.1 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 31 புதிய மருத்துவ கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் ஆகியோர் உடன் உள்ளனர்.

### வேலூர் கஸ்பா பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

## ஏ.பி.நந்தகுமார் – தி.அ.முகமது சகி – டி.எம்.கதிர் ஆனந்த் – ப.கார்த்திகேயன் – மேயர் சுஜாதா ஆனந்தகுமார் சிறப்புரை!

வேலூர், ஜூலை 19 -

வேலூர் மாநகரம் கஸ்பா பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் பொதுக்கூட்டம் இன்று (சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு கஸ்பா மிசா. மு.நடராஜன் திடலில் நடக்கிறது, கூட்டத்திற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.சையத் நிஜாமுதின் தலைமை தாங்குகிறார்.

துணை அமைப்பாளர் எம்.பாஸ்கர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

தலைமைப பொதுக்குழு உறுப்பினர் மா.ப.அன்புநிதி, கஸ்பா பகுதி தி.மு.க. செயலாளர் தி.அ.முனவர் பாஷா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.எம். தேவராஜ், துணை அமைப்பாளர்கள் எஸ்.ரஞ்சித்குமார் கே.பி.கவுஸ், ஜி.ஷானவாஸ், சல்மான்கான், டி. அசோக்குமார், வட்டப் பிரதிநிதி எஸ்.மதன்ராஜ், மாமன்ற உறுப்பினர்கள் ஜெ.கைருன்னிஷா, ரேகா அன்புநிதி, தபசும் பர்வீன், மாநகர சிறுபான்மையில் நல உரிமை பிரிவு அமைப்பாளர் காலப்பா என்ற அப்துல் மஜீத், மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் எம்.அந்தோணி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார், எம்.எல்.ஏ. மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, தலைமைக் கழக பேச்சாளர் ச.பேரரசன், மாநகரச் செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், தொகுதி பார்வையாளர் அப்துல் மாலிக், ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இதில் மாவட்டப் பொருளாளர் நரசிம்மன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், தேர்தல் பணிக்குழு செயலாளர் என். சுப்ரமணி சிறுபான்மை நல உரிமைபிரிவு அமைப்பாளர் நூருல்லா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யு.ரவிக்குமார் மற்றும் நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டு பேசுகிறார்கள்.

முடிவில் கஸ்பா பகுதி தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ஆர்.பாலமுருகன் நன்றி கூறுகிறார்.

### புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதியில்

# பாதாளச் சாக்கடையை சீரமைத்திட வேண்டும்!

## தலைமைப் பொறியாளரிடம் நந்தா. சரவணன் மனு!

புதுச்சேரி, ஜூலை. 19-

முத்தியால்பேட்டையில் பாதாள சாக்கடையில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை போர்க்கால அடிப்படையில் சீரமைக்க வேண்டும் என தி.மு.க., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா சரவணன், பொதுமக்களுடன் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் வீரசெல்வத்தைச் சந்தித்து மனு அளித்தார்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது: -

புதுச்சேரி மாநிலம், முத்தியால்பேட்டை தொகுதியில் 35 ஆண்டுகளுக்கு முன் பாதாள சாக்கடை திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால், இதுவரையில் போதிய பராமரிப்பு இன்றியும், நகர வளர்ச்சிக்கு ஏற்ப தொழில் நுட்பங்கள் மேம்படுத்தப்படவில்லை. பாதாள சாக்கடைகள் அமைக்கப்பட்டு 35 ஆண்டுகளுக்கும் மேல் ஆவதால் போதிய பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமல், முத்தையா முதலியார் வீதி, அருணகிரி செட்டியார் தெரு, பிள்ளையார் கோயில் வீதி, காந்தி வீதி சந்திப்பு, பாரதிதாசன் விதி, காந்தி விதி மணிக்கூண்டு அருகில், ஒத்தவாடை தெரு, வேலாயுதம் பிள்ளை வீதி, உள்ளிட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைகள் உடைந்தும், பல இடங்களில் அடைப்புகளும் ஏற்பட்டுள்ளன. பாதாள சாக்கடை தொட்டிகள் நிரம்பி வழிந்து, கழிவுநீர் சாலைகளில் ஓடுகிறது. இதனால் முத்தியால்பேட்டை தொகுதி முழுவதும் சுகாதாரக்கேடு சூழ்நிலை நிலவி வருகிறது.

எனவே, போர்க்கால அடிப்படையில் உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுத்து பாதாளச் சாக்கடை அடைப்பு பணியை சரி செய்து கொடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது, திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.




கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கலிங்கலேரி ஊராட்சியில் ஆரம்ப பள்ளி கட்டிடம், ஊராட்சி மன்ற கட்டிடம், கோணலூர் ஊராட்சியில் புதிய ஊராட்சி மன்ற கட்டிடம், நாடழகானந்தல் ஊராட்சியில் கரும காரிய மண்டபம், நாடக மேடை, மேல்நீர் தேக்கத் தொட்டி, இராஜந்தாங்கல் ஊராட்சியில் புதிய ஊராட்சி மன்ற கட்டிடம், கீக்களூர் ஊராட்சியில் கரும காரிய மண்டபம், சத்துணவு சமையல் அறை கட்டிடம , நாரியமங்கலம் ஊராட்சி கார்ணாம்பூண்டி கிராமத்தில் பல்நோக்கு கட்டிடம் மற்றும் நியாயவிலைக்கடை, ஐங்குணம் ஊராட்சியில் புதிய ஊராட்சி மன்ற கட்டிடம், ஆராஞ்சியில் புதிய ஊராட்சிமன்ற கட்டிடம், ஆராஞ்சி ஊராட்சி குமாரகுடியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அங்கன்வாடி மைய கட்டிடம் என ரூ.2.11கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட அரசு கட்டிடங்களை சட்டபேரவைத் துணைத்தலைவர் கு.பிச்சாண்டி திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளகள்; ஆராஞ்சி ஆறுமுகம், இரா.ராஜேந்திரன், ஒன்றிய துணை செயலாளர்கள் சிவக்குமார், ஜெயபாரதி மணி, மேக்களூர் கேசவன், ஆராஞ்சி சேகர், இளைஞரணி சதிஷ், பச்சையப்பன், மணவாளன், கருணாநிதி, வெங்கடேசன், நீலமேகன், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனார்.



முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.7.2025) முகாம் அலுவலகத்தில், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஆர். ஸ்ரீராம் அவர்கள் ராஜஸ்தான் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக றொறுப்பேற்கவுள்ளதை யொட்டி சந்தித்துப் பேசினார்.




# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.என்.அண்ணாதுரை எம்.பி. அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 19.07.2025 | தண்டராம்பட்டு மேற்கு ஒன்றியம் | வேப்பூர் செக்கடி | கந்திலி கரிகாலன் மாபூபதி |
| 2 | | தண்டராம்பட்டு மத்தியம் ஒன்றியம் | சாத்தனூர் | கந்திலி கரிகாலன் மாபூபதி |
| 3 | | செங்கம் கிழக்கு ஒன்றியம் | கன்னங்குறிக்கை | மதன்குமார் கோ.ராதிகா |
| 4 | | செங்கம் மத்திய ஒன்றியம் | பரமனந்தல் | மதன்குமார் கோ.ராதிகா |
| 5 | | செங்கம் மேற்கு ஒன்றியம் | மேல் பள்ளிப்பட்டு | மதன்குமார் கோ.ராதிகா |
| 6 | | ஜவ்வாது மலை தெற்கு ஒன்றியம் | கல்யாத்தூர் | சேலம் சுஜாதா அ.தமிழரசி |
| 7 | | செங்கம் நகரம் | தோக்கவாடி | சேலம் சுஜாதா அ.தமிழரசி |
| 8 | 20.07.2025 | திருவண்ணாமலை கிழக்கு ஒன்றியம் | தண்டரை ஊராட்சி | சேலம் சுஜாதா கோ.ராதிகா |
| 9 | | வேட்டவலம் பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | சேலம் சுஜாதா கோ.ராதிகா |
| 10 | | கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியம் | சாணி பூண்டி | மதன்குமார் அ.தமிழரசி |
| 11 | | கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியம் | ஆவூர் | மதன்குமார் அ.தமிழரசி |
| 12 | | கீழ்பென்னாத்தூர் பேரூர் | பேருந்து நிலையம் | மதன்குமார் அ.தமிழரசி |
| 13 | | துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியம் | சேரியந்தல் | கந்திலி கரிகாலன் வி.ஜான்ஸின் சுவேதா |
| 14 | | துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றியம் | மல்லவாடி | கந்திலி கரிகாலன் வி.ஜான்ஸின் சுவேதா |
| 15 | 21.07.2025 | கலசப்பாக்கம் கிழக்கு ஒன்றியம் | கலசப்பாக்கம் ஊராட்சி | மதன்குமார் கோ.ராதிகா |
| 16 | | கலசப்பாக்கம் மேற்கு ஒன்றியம் | மேல்சோழங்குப்பம் ஊராட்சி | மதன்குமார் கோ.ராதிகா |
| 17 | | புதுப்பாளையம் கிழக்கு ஒன்றியம் | காஞ்சி ஊராட்சி | சேலம் சுஜாதா மோகநாதன் |
| 18 | | புதுப்பாளையம் மேற்கு ஒன்றியம் | காரப்பட்டு ஊராட்சி | சேலம் சுஜாதா மோகநாதன் |
| 19 | | புதுப்பாளையம் பேரூர் | புதுப்பாளையம் பேரூர் | சேலம் சுஜாதா மோகநாதன் |
| 20 | | ஜவ்வாதுமலை வடக்கு ஒன்றியம் | கோவிலூர் ஊராட்சி | மங்கலம் பிரபாகரன் |
| 21 | | போளூர் வடக்கு ஒன்றியம் | படவேடு ஊராட்சி | மங்கலம் பிரபாகரன் |

திருவண்ணாமலை

நாள் : 17.07.2025

கலைஞர் 100 1924 - 2023

